**தலைப்பு 248 - மதுவரித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 248 மதுவரித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 27 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,072.45 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 983.98 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 88.47 மில்லியன் அதாவது 8.25 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 745.67 | 743.10 | 2.57 | 0.34 |
| மூலதனம் | 326.78 | 240.88 | 85.90 | 26.29 |
| மொத்தம் | 1,072.45 | 983.98 | 88.47 | 8.25 |

**2.2 வருமானக் கணக்குகள்**

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக 02 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 125,035 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 120,277.89 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 96.19 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது**

| வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை/ (பற்றாக்குறை) | மிகை / (பற்றாக்குறை) மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 10.02.04.01 | 125,000 | 120,238.07 | (4,761.93) | (3.81) |
| 10.02.06.00 | 35 | 39.82 | 4.82 | 13.77 |
| மொத்தம் | 125,035 | 120,277.89 | (4,757.11) | |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 24801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 38.00 | 37.98 | 30.00 | 31.47 | 171.00 | 129.94 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் 7002/0000/00/0072/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 228 மில்லியனாக இருந்தது.

**2.5 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் 04 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 88 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0122/000 | 54.0 |
| 6000/0000/00/0002/0178/000 | 4.0 |
| 6000/0000/00/0016/0126/000 | 17.0 |
| 6000/0000/00/0018/0119/000 | 13.0 |
| மொத்தம் | 88.0 |

**2.6 கணக்காய்வு அவதானிப்புகள்**

மதுவரித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

திணைக்களத்தால் கிழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் இரண்டு பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்ட வகையில் பேணப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| நட்டங்களின் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளது வரையாக்கப்பட வில்லை. |
| வாகன பதிவுப் புத்தகங்கள் | நிதிப்பிரமாணம் 1645(அ) | 28 வாகனங்களுக்கு பதிவுப் புத்தகம் பேணப்பட்டிருக்காமை. |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட வில்லை. |

**3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

6 இடர்க் கடன் கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால், ரூபா 322,849 கூட்டுத்தொகையான இடர்க் கடன் மீதியொன்றினைக் திருப்திகரமாக ஆராய முடியாதிருந்தது.

**3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட கணக்காய்வு ஐய வினாவொன்றிற்கு 2017 யூலை 10 வரையிலும் எவ்வித பதில்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் இந்த வினாவுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணக்கிடக்கூடிய பெறுமதி ரூபா 140,099 ஆகக் காணப்பட்டது.

**3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பிடுகள் முழுமையாகவும் துல்லியமாகவும் தயாரிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக 10 செலவின விடயங்களுக்கு குறைநிரப்பு மதிப்பீடுகளினூடாக ரூபா 82,787,553 மேலதிக ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 50 இற்கு அமைய மற்றும் இந்த செலவின விடயங்களுடன் தொடர்புடைய மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் 11 சதவீதம் தொடக்கம் 200 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் இது காணப்பட்டது.

(ஆ) குறைநிரப்பு மதிப்பிடுகளினூடாக ரூபா 38,420,000 மற்றும் நிதிப்பிரமாணங்கள் 66 ஆம் இலக்க வழிகளில் ரூபா 28,677,919 ஆக 05 நோக்க விடயங்களுக்கு ரூபா 67,097,916 கூட்டுத்தொகையான மேலதிக ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் இந்த நோக்க விடயங்களின் அடிப்படை மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளில் 21 சதவீதமாகக் காணப்பட்டது.

(இ) 2502 ஆம் இலக்க நோக்க விடயத்திற்கு அடிப்படை மதிப்பிடுகளினூடாக ஒதுக்கீட்டு ஏற்பாடுகளின்றி குறைநிரப்பு மதிப்பீடுகளினூடாக ரூபா 18,600,000 தொகைக்கு ஏற்பாடுகள் ஒதுக்கிடப்பட்டிருந்த போதிலும், அவற்றின் ரூபா 18,470,197 தொகைக்கு அல்லது 99 சதவீதமான ஏற்பாடுகளுக்கு சேமிப்பொன்று காணப்பட்டது. மேலும், கட்டிடமொன்றின் நிர்மாண நடவடிக்கைகளில் வழமைக்கு மாற்றமான தாமதம் காரணமாக கட்டிடம் மற்றும் நிர்மாணங்களின் கீழ் ஒதுக்கிடப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து 24 சதவீதம் அல்லது ரூபா 64,649,613 தொகையொன்று சேமிக்கப்பட்டிருந்தது.

**3.5 கட்டுநிதிக் கணக்கு**

2016 திசெம்பர் மாதம் கட்டுநிதி விடுவிப்பதற்குரிய மாதாந்த பொழிப்பின் பிரகாரம் ரூபா 73,000,000 ஆன கட்டுநிதி மீதிகள் அதற்குரிய சீராக்க அறிக்கைகளில் ரூபா 90,547,553 என காண்பிக்கப்பட்டிருந்தது.

**3.6 பொது வைப்புக் கணக்கு**

2 வருடங்கள் தொடக்கம் 5 வருடங்கள் வீச்சிலான காலப்பகுதியொன்றுக்கு மேற்பட்ட காலம் கழிந்த ரூபா 485,000 கூட்டுத்தொகையான 19 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் உறுப்புரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 வருமானக் கணக்குகள்**

---

வருமான மதிப்பீடுகளின் தயாரிப்பு, வருமான சேகரிப்பு, 02 வருமான குறியீடுகளுடன் தொடர்புடைய கணக்குகளின் கணக்கீடு மற்றும் சமர்ப்பித்தலுடன் தொடர்புடைய பொறுப்புக்கள் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரான திணைக்களத் தலைவர்க்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வருமான குறியீடுகளின் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) 10.02.04.01 ஆம் வருமானக் குறியீடு - மதுவரி (மதுபானம்)**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம், ரூபா 2,544.81 மில்லியன் கூட்டுத்தொகையான வருமான நிலுவைகள் காணப்பட்டதுடன் இந்த வருமான நிலுவைகள் 1 வருடம் தொடக்கம் 5 வருடங்கள் வரையான வீச்சினையுடைய காலப்பகுதியொன்று சேர்ந்தவையாகக் காணப்பட்டது.

(ii) மதுபான ஏற்றுமதியில், ஏற்றுமதி வரி தள்ளுபடிகளின் அளிப்புக்கு திணைக்களத்தினால் அடிப்படையாக கொள்ளப்பட்ட சுங்க ஏற்றுமதி குறிப்பு மாத்திரம் ஏற்றுமதியாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், உண்மையாக ஏற்றுமதிசெய்யப்பட்ட அளவினை தீர்மானிப்பதற்கு முறையானதொரு முறைமையொன்றினை திணைக்களம் அமுல்படுத்தியிருக்கவில்லை.

(iii) மால்ட் மதுபான உற்பத்திக்கு லயன் பீர் கம்பனியினால் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களின் வகைகள் மற்றும் அவற்றின் அளவுகளினை விசாரனை செய்வதற்கு முறைமையொன்றினை மதுவரித் திணைக்களம் கொண்டிருக்கவில்லை.

(iv) மால்ட் மதுபானங்களில் உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதுடன் அதிலுள்ள சீனியின் சதவீதம் தொடர்பில் அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திடமிருந்து பகுப்பாய்வு ரீதியான அறிக்கையொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10.02.06.00 ஆம் வருமானக் குறியீடு - புகையிலை வரி

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டிற்கான உண்மை வருமானத்துடன் மீளாய்வாண்டிற்கான உண்மையான வருமானத்தை ஒப்பிடுகையில் ரூபா 05 மில்லியனினால் அதிகரித்திருந்தது.

(ii) சிகரட்களின் ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரங்களை திணைக்களம் விநியோகிக்கின்ற போதிலும், ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய சிகரட்டுகளின் அளவு உண்மையாக ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது என்பதை ஸ்தாபிப்பதற்கு பொருத்தமான முறைமையொன்றினை திணைக்களம் திட்டமிட்டிருக்கவில்லை.

(iii) பீடிகளின் உற்பத்திக்கு இறக்குமதி செய்யப்பட்ட பீடி இலை வகையின் சரியான தன்மையை ஸ்தாபிப்பதற்கு முறைமையொன்றினை திணைக்களம் இதுவரை திட்டமிட்டிருக்கவில்லை.

**3.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

24801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம், அந்த திகதியில் நிலுவை மீதிகளின் மொத்தம் ரூபா 2,858,223 ஆகக் காணப்பட்ட அதேவேளை, இந்த வருமதி மீதிகள் 01 வருடத்திலிருந்து 20 வருடங்கள் வீச்சிலான காலப்பகுதியொன்றுக்கு தொடர்ந்திருந்த போதிலும், இந்த வருமதி மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ஓய்வுபெற்ற ஆறு உத்தியோகத்தர்களிடம் நிலுவையாகவுள்ள ரூபா 420,993 கூட்டுத்தொகையான தொகையொன்றினை அவர்களின் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தியிருந்த போதும் அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இடைநிறுத்தப்பட்ட 15 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 1,224,830 தொகையான கடன் மீதி தொடந்தும் காணப்பட்டது. அந்த கடன் மீதியில் முறையே 5 வருடங்கள் மற்றும் 20 வருடங்களுக்கு மேலாக காலம் கடந்திருந்த ரூபா 206,920 மற்றும் 28,700 தொகைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஈ) திணைக்களத்தின் சேவைகளிலிருந்து வெளியேறிய உத்தியோகத்தர்களிடமிருந்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய ரூபா 190,160 கடன் மீதியொன்றாகக் காணப்பட்டது. இது 6 வருடங்கள் தொடக்கம் 9 வருடங்கள் வரையான வீச்சினைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு வருமதியாகக் காணப்பட்டிருந்த போதிலும், இந்த கடன் மீதிகளினை தீர்ப்பனவு செய்வதற்கு போதியளவான நடவடிக்கைகளினை திணைக்களம் எடுத்திருக்கவில்லை.

(உ) சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 526,068 கடன் மீதியொன்று காணப்பட்டது. இந்த வருமதி 7 வருடங்கள் தொடக்கம் 20 வருடங்கள் வரையிலான வீச்சினையுடைய காலப்பகுதியொன்றுக்கு மேலாகக் காணப்பட்டது.

**3.9 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

திணைக்கள வழிகாட்டல், அறிவிப்புக்கள் மற்றும் ஏனைய ஏற்பாடுகளின் அடிப்படையில் முறையான கணக்காய்வொன்று நடாத்தப்பட்டிருந்தது என்பதை நிருபிக்கக்கூடிய கணிசமான சான்றுகள் காணப்படவில்லை. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் போதுமானதொரு செயலாற்றல் இடம் பெற்றிருந்ததா என்பதை அவதானிக்க முடியாதிருந்தது.

**3.10 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 77,690 பெறுமதியான வாசிகசாலை புத்தகங்களின் இருப்பொன்று 04 வருடங்களாக விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 02 மோட்டார் வாகனங்களினை திணைக்களம் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற அதேவேளை, அந்த வாகனங்களின் உரிமைத்துவத்தினை அளிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிராந்திய அலுவலகங்களினால் பராமரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற 10 மதுவரி நிலையங்களுடன் தொடர்புடைய காணிகளை முறையாக அளிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருந்த போதிலும், தலைமை அலுவலகத்தில் எவ்வித பொருள் மெய்மையாய்வும் நடாத்தப்பட்டிருக்க வில்லை.

**3.11 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏனையவைகளுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காணப்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1999 இன் 08 ஆம் இலக்க டுபாக்கோ வரி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு | டுபாக்கோ வரி வெகுமதி நிதியொன்று அமைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1998 மார்ச் 04 இன் 818 ஆம் இலக்க மதுவரி அறிவிப்பு | மதுவரி வெகுமதி நிதியத்திலிருந்து மதுவரி உத்தியோகத்தர்கள், தகவல் தருபவர்கள் மற்றும் ஏனையவர்களுக்கு பண வெகுமதிகளின் செலுத்துகைகளுக்கு எவ்வித அங்கீகாரமும் எழுத்துமூல முறைமையும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.12 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பாதீட்டு மதிப்பிடுகள் மற்றும் செயல்நடவடிக்கை திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதுவரி வருமானக் குறியீடு தொடர்பில் வருமானமாக ரூபா 125,000 மில்லியனை சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போது, மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 120,238 மில்லியன் வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. இது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 96 சதவீதமாகக் காணப்பட்டது.

(ii) வலுவான மதுபான உற்பத்திக்கு திணைக்களத்தில் 22 கம்பனிகள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், மொத்த வருமானத்தில் 92 சதவீதத்தினை 05 கம்பனிகள் மாத்திரம் பங்களித்திருந்தது. மீதி 17 உற்பத்தி கம்பனிகளும் 7 சதவீதமான குறைந்த மட்டமொன்றிலான வருமான பங்களிப்பினை கொண்டிருந்தது. அதற்கமைய, இந் நாட்டின் வலுவான மதுபான சந்தை வலுவான மதுபானத்தை உற்பத்தி செய்யும் 05 கம்பனிகளில் சார்ந்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) 2011 ஆம் ஆண்டில் வலுவான மதுபானம் 53.8 மில்லியன் லீற்றர்கள் உற்பத்தி செய்யப்பட்டிருந்த அதேவேளை, 2014 ஆம் ஆண்டில் 18 சதவீதமான குறைவொன்றுடன், 43.9 மில்லியன் லீட்டர்களாக அது பின்னடைந்தது. 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை இந்த குறைவு தொடர்ச்சியாகக் அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2015 ஆம் ஆண்டின் போது 18 சதவீதமான அதிகரிப்பொன்றுடன், அது மீண்டும் 51.8 மில்லியன் லீட்டர்கள் வரை உயர்வடைந்திருந்ததுடன், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2016 ஆம் ஆண்டின் போது, மேலும் 7 சதவீத்தினால் அது அதிகரித்தது. இந்த தகவலில் பிரகாரம், வலுவான மதுபானத்தின் அளவு தொடர்பான உற்பத்தி வரிகள் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் வரை தொடர்ச்சியாக குறைவடைந்தமை மற்றும் 2015 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் அது அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. தற்போது மதுபான உற்பத்தியின் மது வரிகள் உயர் வீதமொன்றில் விதிக்கப்பட்டிருந்த போதிலும், மதுபான உற்பத்தியில் வழமைக்கு மாற்றமான வேறபாடுகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2011 ஆம் ஆண்டில் ரூபா 47,022 மில்லியனாகக் காணப்பட்ட வலுவான மதுபானம் மீதான வரிகளிலிருந்தான வருமானம், 120 சதவீதமொன்றான அதிகரிப்புடன், 2016 ஆம் அண்டில் ரூபா 103,496 மில்லியன் வரை உயர்வடைந்தது. எவ்வாறாயினும், 2011 ஆம் ஆண்டில் 53.8 மில்லியன் லீற்றராகக் காணப்பட்ட வலுவான மதுபான உற்பத்தி 3 சதவீதமான அதிகரிப்பொன்றுடன் மாத்திரம், 2016 ஆம் ஆண்டில் 55.5 மில்லியன் லீற்றர் வரை அதிகரித்தது. அதேபோல், கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 2011 ஆம் அண்டில் 1 லீட்டருக்கான சராசரி உற்பத்தி வரி ரூபா 874 ஆகக் காணப்பட்டதுடன், 113 சதவீதமான அதிகரிப்பொன்றுடன், 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 1,865 வரை அதிகரித்தது. அதற்கமைய, மதுவரித் திணைக்களத்தின் வருமான அதிகரிப்புக்கு அரசினால் உயர் வரி வீதமொன்றினை விதிக்கும் காலப்பகுதியின் போது என்ன நடந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(v) மீளாய்வாண்டின் போது 4,593 மதுபான தொழிநுட்ப குற்ற திடீர் சோதனைகளினுடாக ரூபா 133.51 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டிருந்த அதேவேளை, முன்னைய ஆண்டில் 4,932 மதுபான தொழிநுட்ப குற்ற திடீர் சோதனைகளினூடாக ரூபா 178.51 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில், ரூபா 44.99 மில்லியன் வீழ்ச்சியொன்று அல்லது 25 சதவீத குறைவு மற்றும் திடீர்சோதனைகள் 339 இனால் அல்லது தொழிநுட்ப குற்றங்கள் தொடர்பில் 7 சதவீத குறைவும் அவதானிக்கப்பட்டது.

(vi) 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டின் போது சிகரெட் அபராதத்திலிருந்தான வருமானம் தொடர்பில் ரூபா 887,800 இனால் வீழ்ச்சியொன்று அல்லது 20 சதவீதமான குறைவொன்று காணப்பட்டது.

(ஆ) திட்டமிடல்

----------------------

2016 இற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது, தன்னியக்க வரி கணிப்பீட்டு முறைமையை செயற்படுத்துவதற்கு ரூபா 18.60 மில்லியன் தேறிய ஏற்பாடொன்று பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதும், அன்ணளவாக அதன் ஒரு சதவீதம் மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது. முறைமைகள் ஆரம்பிப்புக்கு முன்னர் அதன் தேவைப்பாடுகளினை முன்னரே இனம்கண்டு திட்டமிடுவதற்கு தவறியமையினால் செயற்பாட்டில் தாமதம் ஏற்பட்டமை இதற்கு காரணமாகவிருந்தது.

(ii) மதுவரித் திணைக்கள தலைமை அலுவலகத்தின் (இராஜகிரிய) நிர்மாணிப்புக்கு 2015 ஆம் மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 500.00 மில்லியன் கூட்டுத் தொகையான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது பதவியணியினர் பயிற்சிக்கு ரூபா 15.00 மில்லியன் தேறிய ஏற்பாடொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. அதில், எதிர்பார்க்கப்பட்ட வகையில் பதவியணியினரை பயிற்சியளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையின் காரணமாக ரூபா 2.47 மில்லியன் அல்லது 16 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

-----------------------------------------------------------------------------------------

திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) கள்ளு வாடகை உரிமைதாரர்களினால் தொடர்புடைய கள்ளு வாடகை அனுமதிப்பத்திர கட்டணங்கள் காலக்கிரமத்தில் செலுத்தப்பட்டுள்ளதா என்பதை ஸ்தாபிப்பதற்கு / உறுதிப்படுத்தலொன்றை பெறுவதற்கு பொருத்தமானதொரு முறைமையை திணைக்களம் அமுல்படுத்தியிருக்கவில்லை.

(ii) 1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவிப்பின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம், உள்ளத்துணிவு செயற்பாடுகளுக்கு அல்லது விசேட அடையாளம் காணல் செயற்பாடுகளுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 200,000 தனியாக அமைக்கப்பட்டிருந்தது. 1994 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை, அவ்வாறான செயற்பாடுகளுக்கு திணைக்களத்தினால் எவ்வித செலுத்துகைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது, உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் கல்வி விடயங்களுக்கு மதுவரி வெகுமதி நிதியிலிருந்து ரூபா 4,500,000 தனியாக அமைக்கப்பட்டிருந்தது. அதில் பயிற்சியைப் பெற்ற புதிய உத்தியோகத்தர்களுக்கு உணவு வழங்குவதற்கு ரூபா 2,331,515 அல்லது 52 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. மேலும், எவ்வித பயிற்சி நோக்கங்களுக்கும் ரூபா 2,168,500 தொகை மீதி செலவிடப்படாதிருந்தது. அதற்கமைய, திணைக்கள உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் கல்வி விடயங்களுக்கு எவ்வித முறையான திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2009 இன் மதுவரிச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலை அல்லது பண்டகசாலையிலிருந்து மதுபான வகைகளைக் கொண்டு செல்லும் போது அல்லது மதுபான வகைகளை இறக்குமதி செய்யும் போது அது தொடர்பில் மதுவரி அனுமதியொன்று (D28 அனுமதி) பெறப்படல் வேண்டும். காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலை அமைந்துள்ள மதுவரி அலுவலகத்தில் அந்த போக்குவரத்து அனுமதியின் பிரதியொன்று கூட காணப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான போக்குவரத்து அனுமதிகள் பெறப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலையினால் பெறப்பட்ட இருப்புக்கள் தொடர்பில் முறையான கண்காணிப்பொன்று செய்யப்பட்டிருந்தது என்பது தொடர்பில் கணக்காய்வின் போது திருப்திப்படுவது சாத்தியமற்றதாகக் காணப்பட்டது.

### 3.13 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் சில சர்ச்சைக்குரிய தன்மையானதாகக் காணப்பட்டன. கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களில் பலவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) மதுபான விற்பனைக்கு அனுமதிபெற்ற இடமொன்றினை இடமாற்றுவதற்கு எவ்வித அனுமதியும் வழங்கப்படக் கூடாதென, 2008 ஏப்ரல் 10 ஆம் திகதிய 1544/17 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் 27 இன் நிபந்தனைகளில் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மாத்தளை நகரத்தில் வெளிநாட்டு மதுபான கடையொன்றினை நடாத்தவதற்கு 1996 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட அனுமதியொன்றின் அடிப்படையில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள துணுக்கை நகரில் வெளிநாட்டு மதுபானக் கடையொன்றினை செயற்படுத்துவதற்கு 2010 ஆம் ஆண்டில் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், இந்த வெளிநாட்டு மதுபானக் கடை தொடர்பில் நிலுவையாகவுள்ள அனுமதிக்கட்டணங்கள் கூட சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்திற்கு 2015 மார்ச் 23 இல் தானியத்தைப் பயன்படுத்தி (Grain Based Distillery) தானியத்தின் அடிப்படையில் காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலை எத்தில் மது (ethyl alcohol) இன் உற்பத்திக்கு செயற்திட்ட முன்மொழிவொன்றை மற்றும் முன்சாத்தியவள ஆய்வு அறிக்கையொன்றினை தனியார் கம்பனியொன்று சமர்ப்பித்தது. பரீட்சாந்த செயற்திட்டமொன்றாக அதனை அமுல்படுத்துவதற்கு நிதி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் அதிகாரம் வழங்கியிருந்தார். செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம், குருநாகல் மாவட்டத்தில் அது ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக, கல்குடா பிரதேசத்தில் (மட்டக்களப்பு) காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அத்துடன் செயற்திட்ட அறிக்கையில் தொழில் துறைக்கு எவ்வகையான தானியம் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பது பற்றிய தகவல் விசேடமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும், மூலப்பொருட்களின் உள்ளீடு மற்றும் வெளியிட்டு விகிதம் பற்றிய தகவல் கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மூலப் பொருட்களாக தானியங்களினைப் பயன்படுத்தும் போது எத்தில் உற்பத்தியின் தயாரிப்பு பற்றி தொழிநுட்ப அறிக்கையொன்று கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பரிந்துரைக்கப்பட்ட மதுபானங்களின் முழுமையான அறிக்கையொன்றும் (ENA) தாக்கத்தை ஏற்படுத்தாத மதுபான வகைகளில் பயன்படுத்தப்பட்ட அடிப்படை பற்றிய (RS) அறிக்கையொன்றும் மதுபானங்களின் RS திருத்தங்கள் கூட சமர்ப்பிக்கப்படவில்லை. உள்ளூர் அரச அதிகாரசபையின் அங்கீகாரம், சுற்றுச்சூழல் அறிக்கைகள், காணியின் உரிமைத்துவம் பற்றி அறிக்கைகள் போன்ற ஆவணங்களும் மற்றும் செயற்திட்ட அறிக்கையுடன் சேர்த்து கொதிகலன் சான்றுப்பத்திரங்கள் கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே

நிலைமையொன்றில் செயற்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்குவது சர்ச்சைக்குரிய தன்மையான விடயமொன்றாகக் காணப்பட்டது.

(இ) பொரலஸ்கமுவ பகுதியிலுள்ள தனியார் நிறுவனமொன்று எப்எல் 08 மதுவரி அனுமதியொன்றுக்கு விண்ணப்பத்திருந்த போதிலும், பல்வேறு காரணங்கள் காரணமாக இந்த அனுமதியினை வழங்க முடியாதென மதுவரித் திணைக்களம் தீர்மானித்தது. எவ்வாறாயினும், பின்னர் 2016 ஒக்தோபர் 01 இலிருந்து அமுுளுக்குவரும் வகையில் தொடர்புடைய அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டமை, கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமொன்றாகக் காணப்பட்டது.

(ஈ) சனாதிபதி செயலாளரின் 2016 யூன் 06 ஆம் திகதிய சீஎஸ்ஏ/4/5/38 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், மதுவரி அனுமதிப்பத்திரத்தின் விநியோகத்திற்கு சனாதிபதி செயலாளரின் முன் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். இந்த வகையில் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது எப்எல் 07 மற்றும் எப்எல் 08 வகையில் 11 அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) மத வழிபாட்டு இடங்கள் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட தூரம் நிறைவேற்றப்பட்டிருக்காமை அம்பலாங்கொட பிரதேச செயலகத்தில் அறிக்கையிடப்பட்ட போதிலும், இந்த உண்மையை புறக்கணித்து, தனியார் மதிப்பீட்டு அறிக்கையொன்றின் பிரதியின் அடிப்படையில், ஹோட்டல் ஒன்றிக்கு எப்எல் 11 அனுமதியொன்று விநியயோகிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 02 மதுபான கடைகளில் விற்பனைக்காகவுள்ள மதுபானம் நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் சீரான தன்மையைக் கொண்டிராமை கணக்காய்வு தெரிவு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட குறிப்புறைக்களுக்கமைய உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு மதுவரி உத்தியோகத்தர்களினால் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

### 3.14 நட்டங்களும் சேதங்களும்

திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனமொன்று 2007 ஆகஸ்ட் 08 இல் விபத்தொன்றிக்குள்ளானமை காரணமாக ரூபா 600,465 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. விபத்திற்கு பொறுப்பான சாரதியிடமிருந்து சேதத்தினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை, ஆயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையேனும் சேதத்தினை அறவிடுவதற்கு சாத்தியக்கூறு காணப்படவில்லை.

### 3.15 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது, திணைக்களத்தின் அலுவலகங்களினை பராமரிப்பதற்கு தேவையான கட்டிடங்களின் நிர்மாண வேலைகளில் மேலதிக தாமதத்தின் விளைவொன்றாக, வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடங்களில் அலுவலகங்களினைப் பராமரிப்பதற்கு ரூபா 12,870,756 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2002 ஏப்ரல் 18 இன் இலங்கை சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் 4 ஆம் அத்தியாயத்தில், மதுபான வகைகளினை செயலிழக்கச் செய்ய ஆளும் விதிகளின் கீழ், மனித நுகர்வுக்கு தகாத மது வகைகளின் வழமையான மற்றும் நடைமுறையிலுள்ள பாவனையினை தகர்த்தல் / மாற்றம் செய்தல் பிரிடெக்ஸ் (Britex) போன்ற (இயற்கையாகச்) செயலிழக்கச் செய்யும் முறையொன்றினைப்

பயன்படுத்தி செயலிழக்கச் செய்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 மார்ச் வரை தொழில்சார் நோக்கங்களுக்கு தனியார் கம்பனியொன்றினால் பெறப்பட்ட மதுபானங்கள் தொடர்பில் செயலிழக்கச் செய்வதற்கு நிறுவப்பட்டிருந்த பிரிடெக்ஸ் முகவர் செயலிழக்கம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. 2016 மார்ச் 01 இல் தொடர்புடைய காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலையினால் செயலிழக்கச் செய்யும் பிரிடெக்ஸ் இன் 500 கிராம்கள் பெறப்பட்டிருந்த போதிலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது இந்த நிறுவனங்களுக்கு மேற்குறித்த செயலிழக்கச் செய்யும் முறையினை மதுவரித் திணைக்களம் விநியோகித்திருந்தது என்பதற்கு கணக்காய்விற்கு எவ்வித சான்றுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. செயலிழக்கச் செய்யும் உற்பத்தி நோக்கங்களுக்கு பெறப்பட்ட மதுபானங்களின் இருப்புக்கள் தொடர்பில் முறையான/ சரியான ஆதரவளித்தல்/ உறுதிப்படுத்தல் கூட பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 மார்ச் 02 ஆந் திகதிய 988 ஆம் இலக்க மதுவரி குறிப்புரையின் பிரகாரம், இறக்குமதி செய்யப்பட்ட மதுவகையின் மீது கலால் வரியொன்று செலுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது இந்த நாட்டிற்குள் முறையே 10,604.6 லீற்றர்கள் மற்றும் 6,455.7 லீற்றர்கள் அளவுடைய மதுவகை கொண்டுவரப்பட்டிருந்தமை மற்றும் மதுவகைகளின் மிகையாக அளவுக்கு வரி செலுத்தப்பட்டிருந்தமை, கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலதிகமாக அவ்வாறு கொண்டுவரப்பட்ட மதுபான வகைகளின் அளவுக்கு கலால் வரி விதிக்கப்பட்டிருந்தது என்ற தகவல் கணக்காய்விற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத அதேவேளை, திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் கண்காணிக்கப்பட்டிருந்த இந்த நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட மதுபான வகைகளின் அளவு மற்றும் அதன் விளைவுகள் தொடர்பான சான்றுகள் கூட விடுவிக்கப்படவில்லை. மேலும், மதுபான வகைகளின் பெறுவனவு மற்றும் மதுபான வகைகளின் இருப்புக்கள் தொடர்பான பதிவுகள் மற்றும் அறிக்கைகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) மதுபான தொழில் துறை கையேட்டின் 2 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட உள்ளடக்கத்தின் பிரகாரம், மதுவரி அத்தியட்சகர் அவரின் அதிகாரப் பகுதியிலுள்ள பண்டகசாலையின் ஆவணங்களினை பரீட்சிக்க வேண்டியதுடன், இருப்புப் புத்தகங்களிலுள்ள மீதிகளினை மாதாந்த ஏனைய மீதிகளுடன் ஒப்பிட்டு மற்றும் மெய்மையாய்வு செய்ய வேண்டும். எவ்வாறாயினும், மேற்பார்வை தினசரி குறிப்புப் புத்தகத்தின் பிரகாரம், களுத்துறை மாவட்டத்திலுள்ள காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலைகளின் மேற்பார்வையில் தொடர்புடைய மதுவரி அத்தியட்சகர் பங்கெடுத்திருக்காமை, 2016 ஆம் ஆண்டின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.16 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதுவரித் திணைக்களத்தின் கட்டிடங்களின் நிர்மாணம் தொடர்பில் ஒரு ஆலோசகராக கட்டிடங்கள் திணைக்களம் செயற்படுகின்றது. எவ்வாறாயினும், முறையான வகையில் ஒப்பந்ததாரர்களினை தெரிவு செய்வதற்கு முன்னர், திணைக்களம் ஆரம்ப /பூர்வாங்க மதிப்பீடுகளின் அடிப்படையில், கட்டிட நிர்மாண நோக்கங்களுக்கு கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டது. அதற்கமைய, நிர்மாணங்களுக்கு திணைக்களத்தினால் பெறப்பட்ட ஏற்பாடுகள் ஏனைய தரப்பினர்களினால் முறையற்றதாக பயன்படுத்தப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில், முறையே ரூபா 41,000,000 மற்றும் 50,000,000 தொகைகள் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கண்டி மற்றும் நுவரெலியா மதுவரி அலுவலகங்களின் நிர்மாணிப்புக்கு மதிப்பிடப்பட்டிருந்த தொகையான, ரூபா 61.84 மில்லியன் தொகையான மொத்த

ஏற்பாடுகளின் தொகை, 2016 யூன் 15 இல் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 மே வரையிலும், நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தின் 05 கட்டிடங்களின் நிர்மாணிப்புக்கு 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 377.05 கூட்டுத்தொகையான தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 வரை எவ்வித கட்டிட நிர்மாணிப்புக்களும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. 2017 யூலை 31 வரை இரண்டு கட்டிடங்களின் நிர்மாண வேலை மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

## 3.17 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினரின் நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 64 | 40 | 24 |
| (ii) | மூன்றாம் நிலை | 433 | 379 | 54 |
| (iii) | இரண்டாம் நிலை | 818 | 662 | 156 |
| (iv) | ஆரம்ப நிலை | 172 | 166 | 06 |
| | மொத்தம் | 1,487 | 1,247 | 240 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் இலட்சிய நோக்கத்திற்கு நேரடியாக பங்களிப்புச் செய்யும் சிரேஷ்ட மட்டத்தில் காணப்படுகின்ற பதவிகளில், பிரதி மதுவரி ஆணையாளரின் பதவிகளில் 04 பதவிகளும் மற்றும் உதவி மதுவரி ஆணையாளரின் பதவிகளில் 03 இன் மூலம் 07 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும், மதுவரி அத்தியட்சகர், மதுவரி பிரதான பரிசோதகர் மற்றும் மதுவரி பரிசோதகர் பதவிகளிலுள்ள முறையே 13,13 மற்றும் 27 வெற்றிடங்களினை நிறப்புவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனக் கட்டமைப்பு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தவதற்கு காலத்திற்கு காலம் கடமைகளினை பகிர்ந்தளித்தல் மற்றும் கடமைகளை மாற்றுவதனூடாக வினைத்திறனான சேவையொன்றினைப் பெற்றுக்கொள்வதனை கருத்திற்கொண்டு மனிதவள முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.